செ. வெ. எண்:- 24 **செய்தி** நாள்:- 07.01.2010

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆணைக்கேற்ப மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கோ.சி.மணி அவர்கள் தலைமையில் கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்களின் ஆய்வுக் கூட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆணைக்கேற்ப இன்று (7–1–2010) தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கோ.சி மணி அவர்கள் தலைமையில் நடப்பாண்டில் கூட்டுறவுத்துறையின் செயலாக்கம் குறித்தான உயர் அலுவலர்களின் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

நடப்பாண்டில் ரூ.2000 கோடி அளவிற்கு பயிர்க்கடன் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில் 31.12.2009 வரை ரூ.1,668.90 கோடி அளவிற்கு 6,97,062 பயனாளிகளுக்கு பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில் இதுவரை கடன்பெறாத 2,07,990 புதிய விவசாயிகளுக்கு ரூ.428.17 கோடி அளவிற்குப் பயிர்கடன் வழங்கப்பட்டுள்ளது. அதுபோல் 2009–2010 ஆம் ஆண்டில் 10,000 புதிய விவசாயிகள் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் அமைக்க திட்டமிடப்பட்டதில் 9625 விவசாயிகள் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு ரூ.119.25 கோடி அளவிற்குப் பயிர்க் கடன்களும், 169 விவசாயிகள் கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு ரூ.3 கோடி அளவிற்கு மத்திய கால கடன்களும் வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் உர வினியோகம் 6.60 இலட்சம் மெ.டன் அளவிற்கும், டி.ஏ.பி. உரம் 2.40 இலட்சம் மெ.டன் அளவிற்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டிற்கு போதுமான உரம் கையிருப்பு உள்ளது என்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இக்கூட்டத்தில் கூட்டுறவுத்துறை அலுவலர்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களுக்கும் அவர்களின் திறமையை வளர்க்க ஆண்டொன்றுக்கு குறைந்தபட்சம் 10 நாட்கள் பயிற்சி அளிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் திரு.க.சண்முகம், இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு. யத்தீந்திர நாத் ஸ்வேன், இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர்கள் திரு.ந.அசோகன், திரு.எல்.சித்திரசேனன், திரு. அ.சங்கரலிங்கம், திரு.க.மா.தமிழரசன், திரு. இரா.ராஜேந்திரன், திரு.கே.பாலசுப்ரமணியம் மற்றும் கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

***வெளியீடு, இயக்குநர்***
***செய்தி, மக்கள் தொடர்புத் துறை,***
***தலைமைச் செயலகம், சென்னை-9***

PRO TO Hon'ble Minister Co.